**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**SESSION CASE NO.110/2023**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 04 ஆம் நாள் திங்கள் கிழமை

அ.சா.11 (பட்டியல் சாட்சி–11) இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஆர்.ஜெயக்குமார் | த/பெ.: | ராமநாதன் |
| கிராமம்: | நெடும்பலம் | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | அம்மன் ஆட்டோ பார்ட்ஸ் |
| வயது: | 58 | முகவரி: | நெடும்பலம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 04.08.2025

**முதல் விசாரணை :–**

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் திருத்துறைப்பூண்டி வேதாரண்யம் சாலையில் அம்மன் ஆட்டோ பார்ட்ஸ் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பில்கள் என் கடையிலிருந்து கொடுக்கப்பட்டது தான். 01.12.2022–ல் என் கடையில் ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கியதற்கான பில் கொடுத்துள்ளேன். அந்த பில் அசல் **அ.சா.ஆ.6** ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

இவ்வழக்கின் எதிரிகள், புகார்தாரர்கள் யாரை எனக்கு தெரியாது. நான் கொடுத்த பில்லில் பெயர் விவரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். ஒரு நாளைக்கு நூற்றுக்கணக்கான நபர்கள் பொருள்கள் வாங்கி பில் வாங்கி போவார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கின் பில்லில் என்ன பொருள்கள் யார் வாங்கினார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது. எந்த வண்டிக்கு இந்த பில் கொடுத்தேன் என்ற விவரமும் எனக்கு தெரியாது. அந்த விவரமும் நான் கொடுத்த பில்லில் இல்லை என்றால் சரிதான். பெயர், வண்டியின் எண் எதுவும் பில்லில் இல்லை என்றால் சரிதான். காவல் துறை கேட்டுக்கொண்டதால் கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. மொத்தத்தில் வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றால்

சரிதான். நான் ஏதும் மெக்கானிக் வேலை செய்யவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை :– இல்லை.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.